# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 220/நகராட்சி/2017**

**நாள் : 24/09/2018**

**திருமதி B. விஜயா,**
**ஆவடி, சென்னை – 600 054.** – **முறையீட்டு மனுதாரர்**

**வருவாய் பிரிவு அலுவலர்கள்,**
**இராஜபாளையம் நகராட்சி,**
**இராஜபாளையம்.** – **எதிர் மனுதாரர்கள்**

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், திருமலைராஜபுரம் தெரு, 235/2 எண்ணிட்ட முகவரியில் தற்பொழுது வசித்து வரும் திருமதி B. விஜயா அவர்களின் 13.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு உட்பட பல்வேறு முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 220/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக மனுதாரர் மற்றும் நகராட்சி அலுவலர்கள் விசாரணையின் போது அளித்த வாக்குமூலங்கள் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், திருமலைராஜபுரம் தெரு, 235/2 எண்ணிட்ட வீட்டு முகவரியில் தற்பொழுது வசித்து வரும் திருமதி B. விஜயா என்பவர் தனது 13.11.2017, 27.11.2017 மற்றும் 11.07.2018 நாளிட்ட முறையீட்டு மனுக்களில் கீழ்க்காணும் முறையீடுகளை தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டுள்ளார்.

(1) இராஜபாளையம், பூபால் பட்டித் தெரு, கதவு எண்.393–இல் உள்ள வீட்டின் முன்பு உள்ள அளவுகளின் படி திரு V. கிருஷ்ணன் என்பவர் பெயரில் சொத்துவரி விதிக்கவும், மேற்குறிப்பிட்ட கதவு எண்ணுள்ள வீட்டிற்கு பின்புறம் உள்ள வீட்டிற்கு திரு V. சுப்பையா என்பவர் பெயரில் சொத்துவரி விதிக்கவும் ;

(2) இராஜபாளையம், பூபால் பட்டித் தெரு கதவு எண்கள் 384 மற்றும் 385 உள்ள வீட்டிற்கு திரு பிரவீன் குமார் பெயரில் உள்ள சொத்துவரியினை மாற்றி திரு V. பழனிச்சாமி பெயரில் தாக்கல் செய்யவும் ;

(3) இராஜபாளையம், பூபால் பட்டித் தெரு, கதவு எண்.392–இல் வசித்துவரும் திரு B. பாலசுப்பிரமணியன் மற்றும் திரு B.ஞானசுந்தரி ஆகியோர் விற்பனை பத்திர ஆவணத்தின்படி 600 சதுர அடிக்கு மட்டும் சொத்துவரி செலுத்தாமல் 1200 சதுர அடிக்கு சொத்துவரி செலுத்திவருவதை இரத்து செய்யவும் ;

(4) ஆவணங்களின் அடிப்படையில், 392 கதவு எண்ணிட்ட வீட்டினை அளந்து அளவுகளை வழங்கக் கோருவது.

2. முறையீட்டு மனுதாரரிடம் 13.02.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. இராஜபாளையம், பூபால்பட்டி தெரு, 384 மற்றும் 385 கதவு எண்களிட்ட இரண்டு வீடுகளும் தனக்குச் சொந்தம் என்று விசாரணையின்போது குறிப்பிட்டார். மேற்குறிப்பிட்ட வீட்டிற்கான சொத்துவரி நகராட்சி அலுவலரால் திரு பிரவீன்குமார் என்பவர் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்தார். மேலும், மேற்குறிப்பிட்ட தெருவில் உள்ள 392 எண்ணிட்ட வீடு தனது கணவரின் பூர்வீக சொத்து என்றும், அந்தவீடு திருமதி ஞானசுந்தரி என்பவருக்குப் பத்திரப்பதிவு செய்யாமலேயே விற்பனை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளதுடன், 393 எண்ணுள்ள வீட்டிற்கான சொத்துவரி யார் பெயரில் உள்ளது எனத் தெரியவில்லை என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். ஆவணப்பதிவு எதுவும் இல்லாமல் வாங்கப்பட்ட 392 எண்ணிட்ட வீடு 1200 சதுர அடியிலும், அவ்வீட்டிற்கு பின்னால் 600 சதுர அடியும் திருமதி ஞானசுந்தரி என்பவரால் கட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

3. 21.03.2018 அன்று இராஜபாளையம் நகராட்சி ஆணையர் மற்றும் இளநிலை உதவியாளர் திருமதி கி. வாசுகி ஆகிய இருவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் சொத்து குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் சார் நீதிமன்றத்தில் 132/2006 எண்ணிட்ட வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், 24.02.2003 நாளிட்ட ஆவண எண். 669/2003–இன் படி முறையீட்டு மனுதாரரின் கணவர் திரு பாலசுப்பிரமணியன் மற்றும் கணவரின் தந்தை திரு வீ. பழனிச்சாமி ஆகிய இருவரும் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தினை திரு பாலசுப்பிரமணியன் மற்றும் திருமதி ஞானசுந்தரி ஆகிய இருவருக்கும் விற்பனைக் கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும் நகராட்சி ஆணையர் மற்றும் இளநிலை உதவியாளர் திருமதி கி. வாசுகி இருவரும் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தார்கள்.

4. நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் 24.02.2003 நாளிட்ட ஆவண எண்.669/ 2003–இல் முறையீட்டு மனுதாரரின் கணவர் திரு ப. பாலசுப்பிரமணியன் மற்றும் அவரது கணவரின் தந்தையார் திரு வீ.பழனிச்சாமி ஆகிய இருவரால் 392 கதவு எண்ணுள்ள 586.50 சதுர அடி மனை மற்றும் அதில் கட்டப்பட்ட 20 சதுர மீட்டர் பரப்பிலான வீடும் திரு பாலசுப்பிரமணியன் மற்றும் திருமதி B. ஞானசுந்தரி ஆகிய இருவருக்கும் விற்பனைக் கிரயம் செய்து தரப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும், 20.01.2004 நாளிட்ட ஆவண எண்.228/2004–இல் பூபால் பட்டி தெரு கதவு எண்.398 மற்றும் அதன் பின்புறம் உள்ள 386.25 சதுர அடியில் 30 சதுர மீட்டர் அளவில் கட்டப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் வீடும் திரு வீ. பழனிச்சாமி அவர்களின் மனைவி திருமதி லட்சுமி அம்மாள் அவர்களுக்கு, அவரது கணவர் திரு வீ. பழனிச்சாமி மற்றும் அவரது மகன் திரு ப. பாலசுப்பிரமணியன் ஆகிய இருவராலும் கிரயம் செய்து தரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். கிரயம் பெற்ற இச்சொத்தினை 28.09.2006 நாளிட்ட ஆவண எண்.3597/2006–இல் திரு வீ. சுப்பையா மற்றும் அவரது வாரிசுதாரர்களுக்கு திருமதி லட்சுமி அம்மாள் கிரயம் செய்து தந்துள்ளதையும் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் அடிப்படையில் 392 கதவு எண்ணிட்ட வீட்டிற்கான சொத்துவரி விதிப்பு எண்.33988 திரு வீ. பழனிச்சாமி பெயரிலிருந்து திருவாளர்கள் பாலசுப்பிரமணியன் மற்றும் ஞானசுந்தரி ஆகியோர் பெயர்களுக்கும், 384 மற்றும் 385 கதவு எண்களிட்ட வீட்டிற்கு முறையே 33982 மற்றும் 33983 எண்களிட்ட சொத்துவரி விதிப்பு திரு வீ.பழனிச்சாமி பெயரிலிருந்து திரு பிரவீன்குமார் பெயருக்கு மாறுதலாகி உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

5. இராஜபாளையம், பூபால் பட்டித் தெரு கதவு எண்.397 வீட்டில் திரு வீரபாண்டி ஆச்சாரி என்பவர் வசித்து வந்துள்ளார். திரு வீரபாண்டி ஆச்சாரி அவர்களுக்கு ஐந்து குமாரர்கள் அவர் காலமான பின்பு அவருக்குப் பாத்தியப்பட்ட சொத்து பாகப்பிரிவினை செய்யப்பட்டு ஐந்து குமாரர்கள் அனுபவத்திலும் வந்துள்ளது. 22.03.1997 நாளிட்ட பதிவு செய்யப்படாத பாக உடன்படிக்கை ஆவணம் மூலம் பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது. திரு வீ. பழனிச்சாமி என்பவர் காலம் சென்ற திரு வீரபாண்டி ஆச்சாரியின் இரண்டாவது குமாரர் திரு வீ. பழனிச்சாமி என்பவருக்கு 627.25 சதுர அடி நிலத்தில் கட்டப்பட்டிருந்த ஒரு வீடு (கதவு எண்.392) மற்றும் 416.50 சதுர அடி பரப்பிலான காலி மனையும் பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டுள்ளது.

6. முறையீட்டு மனுதாரர் திருமதி B. விஜயா திரு வீ. பழனிச்சாமி அவர்களின் மருமகள். திரு வீ. பழனிச் சாமி என்பவரும் அவரது மகன் மற்றும் முறையீட்டு மனுதாரரின் கணவருமான திரு ப. பாலசுப்பிரமணியன் ஆகிய இருவரும் இயற்கை எய்துவிட்டனர். அவர்கள் இருவரும் இயற்கை எய்துவதற்கு முன்பாகவே கீழ்க்காணும் ஆவணங்கள் மூலமாக தங்களுக்குப் பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்தை விற்பனைக் கிரயம் செய்து தந்துள்ளனர்.

(1) 586.50 சதுர அடி நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டிருந்த 20 சதுர மீட்டர் பரப்பிலான வீடு (கதவு எண்.392) 24.02.2003 நாளிட்ட ஆவண எண். 669/2003–இன் படி திரு பாலசுப்பிரமணியன் மற்றும் அவரது மனைவி திருமதி ஞானசுந்தரி ஆகிய இருவருக்கும் கிரயம் செய்து தரப்பட்டுள்ளது.

பாகப்பிரிவினை ஆவணத்தின்படி 392 கதவு எண்ணிட்ட நிலத்தின் பரப்பு 627.25 (9'x69.75') சதுர அடி இம்மனையில் 586.50 சதுர அடி விற்பனை செய்யப்பட்டது போக எஞ்சியிருப்பது 41.25 சதுர அடி (627.25 '-586.50') மட்டுமே ;

(2) 386.25 சதுர அடி நிலத்தில் 30 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்ட 398 கதவு எண்ணிட்ட வீட்டினை 20.01.2004 நாளிட்ட ஆவண எண்.228–இன் படி திருமதி லட்சுமி அம்மாள் அவர்களுக்கு அவரது கணவர் திரு வீ. பழனிச்சாமி மற்றும் அவரது மகன் ப. பாலசுப்பிரமணியன் ஆகிய இருவராலும் விற்பனைக் கிரயம் செய்து தரப்பட்டுள்ளது.

பாகப்பிரிவினை ஆவணத்தின்படி இந்நிலத்தின் பரப்பு 416.50 சதுர அடி. இம்மனையில் 386. 25 சதுர அடி நிலம் திருமதி லட்சுமி அம்மாள் அவர்களுக்கு கிரயம் செய்து தரப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நிலம் 30.25 சதுர அடி மட்டுமே ;

(3) 20.01.2004 நாளிட்ட ஆவண எண்.288/2004–இன் படி தனது கணவர் மற்றும் மகனிடமிருந்து கிரயம் பெற்ற நிலத்தினை திருமதி லட்சுமி அம்மாள் 28.09.2006 நாளிட்ட ஆவண எண்.3597/2006 மூலம் திரு வீ. சுப்பையா மற்றும் அவரது மகன் , பேரனுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் கணவர் திரு ப. பாலசுப்பிரமணியன் 15.09.2006–இல் காலமாகிவிட்டார். திரு ப. பாலசுப்பிரமணியன் காலமான பின்பு அவரது தாயார் திருமதி லட்சுமி அம்மாள் தான் கிரயம் பெற்ற நிலத்தினை திரு வீ.சுப்பையா மற்றும் அவரது மகன், பேரனுக்கு கிரயம் செய்து தந்துவிட்டார். மேற்குறிப்பிட்ட கிரய விற்பனை அடிப்படையிலேயே திரு பிரவீன்குமார் பெயரில் 384 மற்றும் 385 கதவு எண்களிட்ட வீட்டிற்கு முறையே 33982 மற்றும் 33983 எண்களிட்ட சொத்துவரி விதிப்பு மாறுதலும் செய்யப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்டவிற்பனைக் கிரயத்தை இரத்து செய்ய ஆணையிடக்கோரி 132/2006 எண்ணிட்ட அசல் வழக்கினை ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு நீதிமன்றப் பரிசீலனையில் உள்ளது. முறையான கிரய ஆவணங்களின் அடிப்படையிலேயே 392,384 மற்றும் 385 எண்களிட்ட வீடுகளுக்கு சொத்துவரி மாறுதல் செய்யப்பட்டுள்ளது. எனினும், திரு வீ. பழனிச்சாமி என்பவருக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்ட நிலத்தில் விற்பனை செய்யப்பட்டது போக எஞ்சியுள்ள நிலத்தினை கண்டறிந்து, அந்நிலத்தினை அளவீடு செய்து தரக் கோரும் மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலிக்குமாறு நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 24–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திருமதி B. விஜயா,
235/2, திருமலைராஜபுரம் தெரு
(தரைதளம், முதல் வீடு),
ஆவடி வட்டம், சென்னை – 600 054.

2. நகராட்சி ஆணையர்,
இராஜபாளையம் நகராட்சி,
இராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி